**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 481/2021**

**Witness PW 1**

| பெயர் | தக்ஷிணாமூர்த்தி | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ | தண்டபாணி | வயது | |
| ஊர் | | தேதி | 04.07.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (04.07.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

இடத்தை என்னிடம் கொடுக்க வேண்டி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . பூர்விக சொத்தின் சர்வே எண் நியாபமில்லை. பூர்விக சொத்தினை யார் விற்பனை செய்தது என்றால் எனது தம்பியின் மனைவியான சரஸ்வதி என்பவரும் கணேஷ்ராஜ் என்பவரும் விற்பனை செய்தனர். யாருக்கு விற்பனை செய்தனர் என்றால் சுப்பராயன் என்பவருக்கு விற்பனை செய்தனர். எனது பூர்விக சொத்தை விற்பனை செய்தது தொடர்பாக நான் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை . நான் தான் குடும்பத்தின் வரவு செலவு கணக்குளை பார்த்து வந்தேன் அதற்கு கணக்கு ஏதேனும் எழுதி வைத்துள்ளேன் என்றால் இல்லை . பூர்விக சொத்தை சரஸ்வதி மற்றும் கணேஷ்ராஜ் என்பவர்கள் விற்பனை செய்யவில்லை என்றாலும் நான்தான் விற்பனை செய்து அந்த பணத்தை எடுத்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல . பூர்விக சொத்தை சரஸ்வதி மற்றும் கணேஷ்ராஜ் என்பவர்கள் விற்பனை செய்ததாக சொல்லப்படும் விவரத்தை நான்

வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . எங்களுக்குள் எப்பொழுது பாக பிரிவினை ஆனது என்றால் 2000 வருடம் ஆனது. இவ்வழக்கு சொத்துக்கள் எனது தம்பியின் மனைவி மற்றும் அவரது வாரிசுகளுக்கு உரிய சொத்துக்களுக்காக பி அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி . எ அட்டவணை சொத்துக்கள் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவை என்றால் சரி . சொத்துக்களை மாறி அனுபவித்து வரும் என்ற விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் பாக பிரிவினை பத்திரம் எழுதிய 6 மாதத்திற்கு பின்பு தெரியும் . பாக பிரிவினை பத்திரத்தின் எனது சொத்துக்களை அவர்கள் சொத்துக்களாக மாற்றி எழுதி கொண்டனர் . அவ்வாறு சொத்துக்களை மாற்றி எழுதிகொண்டதற்கான எதாவது வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4 வது பிரதிவாதி சொத்துக்களை கிரையம் வாங்கும் சமயத்தில் அவர் வாங்கிய சொத்தில் பட்டாக்கள் சரஸ்வதி மற்றும் அவர்களது பிள்ளைகள் பெயரில் இருந்தது என்று சொன்னால் சரி. வா.சா.ஆ 3 11ம்பக்கத்தில் சர்வே எண். 27/4 , 27/5, 27/6 எ, 27/6 பி ஆகிய எண்களுக்குரிய பட்டா கணேஷ்ராஜ் மற்றும் சரஸ்வதி பெயரில் உள்ளதுஎ ன்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்கள் இல்லை என்றாலும் நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல . நான் சொல்வது போல் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் ஏற்பு ரசீது கொடுத்திருப்பார்கள் என்றாலும் நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றாலும் ரசீது எனக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல . 4 ம் பிரதிவாதி உண்மையான உரிமையாளரிடம் இருந்து தாவா சொத்தின் பகுதிகளை கிரையம் பெற்றுள்ளார் எனவே அவர் பெற்ற கிரையம் சட்டப்படியான கிரையம் என்று சொன்னால் தப்பான சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் அதனை கிரையம் பெற்றுள்ளார் நான்

சார்பதிவாளரிடம் பத்திரங்களை பதிவு செய்யக்கூடாது என்று ஆட்சேபனை கொடுத்திருந்தேனா என்று சொன்னால் எனக்கு 4 ம் பிரதிவாதி வாங்கிய பிறகு தான் தெரியும். வழக்கு சொத்திற்கான பட்டா 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 4 வது பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டாவை மாற்றம் செய்ய வேண்டி நான் வட்டாட்சியர் மற்றும் மமாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரி நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்ததால் கொடுக்கவில்லை . எனது வழக்கை கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று சொன்னால் சரியல்ல . எனது குடும்ப சொத்துக்கள் 3 வது நபருக்கு செல்லக்கூடாது என்ற காரணத்தினால் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதிகளிடம் பேசியதாக சொல்லப்படும் பதிவான வா.சா.ஆ 4 ஐ எந்த அலைபேசியில் பதிவு செய்தேன் என்று சொன்னால் எனது மகனான ஜெயகுமார் என்பவர் அலைபேசியில் பதிவு செய்தேன் . அந்த அலைபேசியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் . அந்த நகல் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வேறு ஒருவர் பேசியதை வைத்து 4 வது பிரதிவாதி பேசியதாக நான் வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- M. S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram